## நாவலப்பிடிய நகர சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நாவலப்பிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------

நகர சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 25,482.726 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,411,531 ஆகும். 2014 ஜூலை 15 திகதி வரை இத் தொகையில் மேலும் ரூபா 16,936,530 தொகையொன்று அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்வாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,839,705 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 12,483,288 தொகை 01 வருடத்தை மிகையான மீதி ஒன்று அடங்கியுள்ளது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,376,377 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,729,837 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 2,646,540 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகை முன்னைய ஆண்டின் மிகையை விட ரூபா 8,337,250 இற்கான அதிகரிப்பு ஒன்றினை காட்டியதுடன், அதற்காக 2013 ஆண்டின் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 16 முதல் 34 வரை ஒட்டுமொத்த அதிகரிப்பு மற்றும் 02 செலவு விடயங்களில் நூற்றிற்கு 21 முதல் நூற்றிற்கு 44 வரை வீச்சில் குறைதல் அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களிடையே விகிதாசாரம் 2.5:1 என உச்ச மட்டத்தில் காணப்பட்டதுடன் நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 50 வருமானக் கடன்பட்டோர் அடங்கியிருந்தனர், நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 63 உம் கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தனர். அத்துடன் அவற்றில் நூற்றிற்கு 61 இற்கான தொகை ஒன்று நிர்மாண வேலைக் கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தனர்.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

(அ) வீதவரி

-----------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில், ரூபா 11,236,364 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன். அவற்றில் ஆண்டின் போது ரூபா 4,003,455 எனப்படும் நூற்றிற்கு 36 தொகையொன்றே அறவிடப்பட்டிருந்தது.

(ii) ஆண்டிற்கான வீதவரி பில் போடப்பட்ட தொகை ரூபா 12,991,212 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 7,483,715 எனப்படும், நூற்றிற்கு 57 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

வருட இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை ரூபா 12,740,406 ஆக காணப்பட்டதுடன், சபையின் பிரதான வருமான மூலமான வீதவரியினை அறவீடு செய்வதற்காக நகர சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வாடகை

-----------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த கடை வாடகை நிலுவை ரூபா 3,318,866 ஆக காணப்பட்டது. இப் பெறுமதியில் ரூபா 1,611,091 தொகை சிறப்பு வர்த்தக தொடர் கட்டட கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகையாகும். இந்த நிலுவை தொகையில் 2011 ஆண்டு முதல் 25 கடை வாடகையாளரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 481,159 தொகையும் 2012 ஆண்டு தொடர்பாக 40 வாடகையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 350,282 தொகையும், அடங்கியிருந்தன. இத் தொகையினை அறவீடு செய்வதற்காக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் போதியளவு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) வாகனத் தரிப்பிடக் கட்டணம்

-------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாகனத் தரிப்பிடங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 642,350 ஆகும்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வான் வண்டிகள் தரிப்பிடங்களில் பில் போடப்பட்ட கட்டணம் ரூபா 511,200 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 135,600 தொகை எனப்படும் நூற்றிற்கு 26 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) லொறி வண்டிகள் தரிப்பிடங்களில் பில் போடப்பட்ட கட்டணம் ரூபா 384,000 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 253,600 தொகை எனப்படும் நூற்றிற்கு 66 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(iii) முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் பில் போடப்பட்ட கட்டணம் ரூபா 2,905,200 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 2,660,850 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது. மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை நூற்றிற்கு 08 ஆகும்.

(ஈ) நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்ற தண்டப்பணம் ரூபா 162,831 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,687,650 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது. 2014 மே 30 திகதி அளவில் மேலும் ரூபா 342,000 முத்திரை கட்டணமும் நீதி மன்றத் தண்டப்பணமும் அறவிடப்படாது காணப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

2011 செப்டம்பர் 22 திகதி ரூபா 41,997 தொகையொன்று குறைவாக வங்கியில் வைப்பு செய்தது தொடர்பாக 2014 ஜூன் 30 திகதி வரை சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------

யப்பானில் நடைபெற்ற சமாதானத்திற்கான நகர பிதாக்களின் 08 ஆவது மாநாட்டில் தலைவரும் உபதலைவரும் பங்குபற்றியிருந்தனர். அதற்காக சபையின் பாதீட்டில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல், சபை நிதியத்தில் இருந்து ரூபா 892,807 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மேலும், இந்த மாநாட்டின் குறிக்கோள் 2020 இல் அணு ஆயுதங்களை அகற்றுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கலந்துரையாடல் ஆக காணப்பட்டமையால் மற்றும் இலங்கையில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப் படாமையினாலும் ஒரு பாரிய தொகையொன்றினை சபை நிதியத்தில் இருந்து செலவிடுதல் மூலம் 2020 வரையேனும் சபைக்கு கிடைக்கும் நலன்கள் பற்றி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பாதீடு மற்றும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளவாறான பெறுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது நூற்றிற்கு 22 முதல் நூற்றிற்கு 103 தொகையும் மற்றும் செலவுகள் நூற்றிற்கு 33 முதல் நூற்றிற்கு 102 வரை வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

4.2 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---------------------------------------------------------------

சபையில் மீளாய்வாணடின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைந்திருக்கவில்லை.

5 முறைகள் மற்றும் கட்டுபாடுகள்

---------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்தக்கள் முகாமைத்துவம்